# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,162 — 1960 ජූලි 22 වැනි සිකුරාදා — 22.7.1960

12,162 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 177 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 179 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 183 | நாணவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சௌக்கியப் பகுதி

**தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்காகப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்தல், 1960/1961 (தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும்)**

தாதிமார் பயிற்சிப்பாடசாலைகளில் மாணவத் தாதிகளாகத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள், மணமாகாத இலங்கையராகிய பெண் பரீட்சார்த்திகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**2. தேவையான தகைமைகள் :**

விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றில் திருப்திப்படும்படியான ஆதாரங்களைக் காட்டுதல் வேண்டும் :—

(அ) 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் திகதியிலன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். சௌக்கியப் பகுதியில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் 32 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு மேலான பரீட்சையில் சித்தியெய்தியவராய் இருத்தல் வேண்டும்.

(இ) ஆகக்குறைந்தது 4 அடி 10 அங்குல உயரமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) நன்னடத்தையும், சிறந்த உடற்கட்டும், இலங்கையில் எப்பாகத்திலும் கடமையாற்றத் தகுதி வாய்ந்த உடல் நிலையும் உடையவராய் இருத்தல் வேண்டும் :

**3. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்பத்திரம் போன்று தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி பதிவுத் தபாலில், " சௌக்கிய சேவை அதிபதி, தபால்பெட்டி 500, கொழும்பு " என்ற விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் " மாணவ தாதித் தேர்தலுக்கான விண்ணப்பம் " என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இதன்கீழ் ஒப்பமிட்டிருப்பவரின் பெயருக்கோ அல்லது இப்பகுதியில் சேவை செய்யும் வேறு எந்த உத்தியோகத்தரின் பெயருக்கோ விண்ணப்பங்களை அனுப்பக்கூடாது. தலைமைக் காரியாலயத்தில் சேவை செய்யும் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரில் கொடுக்கவுங்கூடாது.

(இ) தேவையான ஆதாரங்களின் பிரதிகளை மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளபடி அனுப்பவேண்டுமேயொழிய வேறு எந்த வகையான பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது.

(ஈ) விண்ணப்பத்தில் ரூபா 5 பெறுமதியான தபால் முத்திரையை ஒட்டி அதன்மீது விண்ணப்பதாரர் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் இந்த முத்திரைப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

(உ) விண்ணப்பங்கள், 1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8 ந் திகதிக்குப் பிந்தாமல் சௌக்கிய சேவை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(ஊ) மேற்கூறிய தேவையான சான்றுகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பற்றி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

(எ) இப்பகுதி ஊழியர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த அதிகாரிகளின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

**4. தேர்வு முறை :**

(அ) மேற்காணும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகள் பரீட்சைப் பகுதியால் நடாத்தப்படும் பொதுக்கல்வித்தராதரப் பரிட்சை (சாதாரண) த் தரத்திலுள்ள ஒரு போட்டி எழுத்துப்பரீட்சைக்கு அமரும்படி வேண்டப்படுவர். பரீட்சை அதிகாரியால் பரீட்சார்த்திகளுக்கெனத் தீட்டப்பட்டுள்ள விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். இப்போட்டிப் பரீட்சை 24.9.60 ல் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறும் :—

கொழும்பு, கண்டி, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, குருநாக்கல், புத்தளம், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகியன.

(ஆ) இந்த இடங்களில் எதிலாவது பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 50 க்குக் குறைந்து காணப்பட்டால் அந்த இடம் ரத்துச் செய்யப்பட்டு, பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களிற் காணப்படும் பிரத்தியேக விலாசத்திற்கு அண்மையிலுள்ள ஒரு இடத்தை ஒழுங்கு செய்யப்படும். தகுதியுடைய பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படும் அனுமதிச்சீட்டுகளில் முடிவுசெய்யப்பட்ட பரீட்சை நிலையங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உள :

(க) ஒரு இலகுவான விடயம்பற்றிய வியாசம்—1 மணித்தியாலம்—100 புள்ளிகள்

(கா) இலங்கையின் அரசியல், சமூக சம்பந்தமானதும், உலக சம்பந்தமானதுமான விடயங்கள் உட்பட பொது அறிவு—30 நிமிடங்கள்—100 புள்ளிகள்.

(கி) வாய்மொழிப்பரீட்சை—200 புள்ளிகள்.

வினாத்தாள்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வழங்கப்படும். தமிழ்/சிங்கள பாஷையில் சித்தியுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகள் மேற்கூறிய இரண்டு பாடங்களையும் தமிழ்/சிங்கள மொழியிலேயே எடுக்க வேண்டும். ஆங்கிலப் பாஷையில் சித்தியுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் இப்பாடங்களை ஆங்கில மொழியில் எடுக்கலாம். விரும்பிய எவரும் இப்பாடங்களைச் சிங்கள மொழியில் எடுக்கலாம். மேற்கூறிய இரண்டு பாடங்களையும் ஒரே மொழியில் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

5. அடையாளச் சீட்டுகள் :

பரீட்சார்த்திகள், தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில், தங்கள் அடையாளத்தை, அடையாளச் சீட்டுகளைக் காட்டுவதன் மூலம் நிரூபிக்க வேண்டும். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தபாற்கந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச்சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்துள் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாதனம் ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்துள் அரசாங்கப் பகுதி, பொதுஜன கூட்டுறவுத் தாபனம், அல்லது வேறு நியதிச்சட்டமுறையான தாபனம் ஆகியவற்றிலொன்றின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் (லைசென்ஸ்) அல்லது பிற சாதனம்.

6. நேர்முகப்பரீட்சை :

எழுத்துப்பரீட்சையில் திருப்திகரமான தராதரத்தையடையும் பரீட்சார்த்திகள் இத்தேவைக்கென அந்தந்தப்பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ள சபையில் நேர்முகப்பரீட்சையொன்றுக்குத் தோன்றும்படி அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைபற்றி அவர்களுக்குத் தனித்தனியாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்காணும் சாதனங்களின் மூலப்பிரதிகளை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் காட்டுதல் வேண்டும் :—

(க) பரீட்சார்த்தியின் பிறப்பைப் பதிவு செய்த அத்தாட்சிப்பத்திரம் அல்லது அவருடைய வயதை எடுத்துக்காட்டுவதும் தலைமைப் பதிவாளரால் கொடுக்கப்பட்டதுமான விசேட பிறப்புப்பத்திரம். பாடசாலைத் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப்பத்திரம், ஞானஸ்நானப் பத்திரம் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(கா) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்த பத்திரம் அல்லது இலங்கைப் பாரம்பரிய பிரஜையாகக்கோரி, அங்கீகரிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி (தகுந்தபடி).

(கி) கல்வித் தகைமைத் தராதரப் பத்திரத்தின் மூலப்பிரதி, தராதரப் பத்திரம் வழங்கப்படாதிருந்தால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட சான்று. (உதாரணமாக: இலங்கை பொதுக் கல்வித் தராதரப்பரீட்சையில் பிரத்தியேக பரீட்சார்த்தியாகத்தோன்றி, சித்தியடைந்தவுடன் கல்விப் பகுதியால் வழங்கப்பட்ட பாடவிபரப் பெறுபேறு அட்டை. பாடசாலையிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தியிருந்தால் அப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்ற பரீட்சார்த்தியின் சித்தியைக் குறிக்கும் கடிதத்தின் மூலப்பிரதி).

(கீ) பரீட்சார்த்தியின் அடையாளச்சீட்டு.

(கு) பரீட்சார்த்தியின் நற்குணங்களையும் நன்னடத்தையையும் எடுத்துக்காட்டும் இரு நற்சான்றுப் பத்திரங்கள். பரீட்சார்த்தி கடைசியாகப் பயின்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற நற்சான்றுப் பத்திரம் இதில் ஒன்றாக இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பிக்கும் சமயத்தில் மேற்கூறிய தேவையான சகல சான்றுகளையும் பரீட்சார்த்தி வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். நேர்முகப்பரீட்சையின்போது தேவையான சான்றுகளைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் நிராகரிக்கப்படுவர்.

7. **தேர்வுபற்றிய அறிவித்தல்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தனித்தனியாக அறிவிக்கப்பவர். நேர்முகப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படாத அல்லது எழுத்துப்பரீட்சையில் சித்தியெய்தாத பரீட்சார்த்திகள் அறிவிக்கப்படமாட்டார்.

8. **வைத்தியப்பரீட்சை.**—தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையில் எப்பாகத்திலும் தாதிமாராகக் கடமையாற்றுவதற்கு உடற்தகுதிவாய்ந்தவர்களென நிரூபிப்பதற்கு ஒரு வைத்தியப்பரீட்சைக்குள்ளாக வேண்டும். வைத்தியப்பரீட்சையில் சித்தியெய்தாதவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

9. மணமாகாத நிபந்தனைகள் :

விண்ணப்பிக்கும் சமயத்தில் மணமாகாமல் இருக்கவேண்டிய விண்ணப்பகாரர் (பரீட்சார்த்தி) கள் மூன்று வருட பயிற்சிக் காலத்திலும் மணஞ்செய்யாதிருக்க வேண்டும். அதன்பிறகு அந்தந்த நேரங்களில் குறிப்பிடப்படும் காலத்திலும்—4 வருடங்களுக்கு மேற்படாத காலம்—மணஞ்செய்யாது கடமையாற்றவேண்டும்.

10. பயிற்சித்திட்டம் :

(அ) மாணவத்தாதிகளுக்கு, மும்மொழிகளில் ஒன்றில் பயிற்சி பெறுவதற்கு வசதியிருக்கிறது. பயிற்சிக் காலம் மூன்று வருடங்களாகும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகளுக்குப் பாடத்திட்டமும் பரீட்சைத்திட்டமும் வழங்கப்படும். ஆங்கிலப் பாஷையில் சித்தியுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மட்டும் ஆங்கில மொழியில் பயிற்சியளிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

(ஆ) பயிற்சிக்காலத்தின்போது, வேலையிலும் நடத்தையிலும் அதிருப்தியேற்படும் வகையில் நடந்துகொள்ளும் மாணவத் தாதிகள் எச்சமயத்திலும் நட்டஈடு இல்லாது பயிற்சியிலிருந்து விலக்கப்படுவர்.

(இ) பயிற்சிக்காலத்தின்போது இலவச விடுதி வசதிகள் இவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்.

11. சம்பளவிகிதமும் படிகளும் :

(அ) மாணவத்தாதிமார்—மூன்று வருடப் பயிற்சிக்காலத்தின்போது இவர்களுக்கு வருடாந்தம் ரூபா 1,080 வீதம் வாழ்க்கைப் படியாக வழங்கப்படும்.

(ஆ) தாதிமாராக நியமிக்கப்பட்டவுடன்—சம்பளம் வருடாந்தம் ரூபா 1,824 வீதம் ஆரம்பித்து 15 வருடங்களுக்கு வருடாந்தம் ரூபா 72 வீதம் அதிகரித்து வருடாந்தம் ரூபா 2,904 வரை உயர்வடையும்.

(க) சலவைப்படி—வருடாந்தம் ரூபா 60 வீதம் மாணவத் தாதிகளுக்கும், தாதிகளுக்கும் வழங்கப்படும்.

(கா) காலணிப்படி—வருடாந்தம் ரூபா 20 வீதம் மாணவத் தாதிகளுக்கும், தாதிகளுக்கும் வழங்கப்படும்.

(கி) இலவச உடைகள்—மாணவத்தாதிகளுக்கும், தாதிகளுக்கும் இலவச உடைகள் வழங்கப்படும்.

12. சேவை நிபந்தனைகள்

(அ) மூன்று வருட பயிற்சிக்காலத்தைத் திருப்திகரமாக முடித்து சௌக்கியப் பகுதியில் நிரந்தர நியமனங்களைப்பெறும் மாணவத்தாதிகள் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்த நிலையிலிருப்பர். பரீட்சார்த்தமான காலம் முடிவில் அவர்களது நியமனம் உறுதிபெறுவது, இக்கால எல்லையில் அவர்கள் சிங்களமொழியில் ஒரு தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதைப்பொறுத்துள்ளது.

(ஆ) பரீட்சார்த்தமான காலத்தில், விதிக்கப்பட்ட திறமைத் தரத்தைச் சிங்களத்தில் எய்தத்தவறுவோர் வேலையினின்று நீக்கப்படலாம் ; ஆனால் பொருத்தமான அதிகாரி, அரசாங்க பாஷையைக் கற்பதற்கு உண்மையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுவாரானல், அவ்வாறு நீக்கப்படுவது தள்ளிவைக்கப்படலாம். பரீட்சார்த்த நிலையிலுள்ள உத்தியோகத்தர் உரிய தேதியின் பின்னர் நியாயமான ஒரு காலத்தில் குறித்த பரீட்சையிற் சித்தியெய்துவாராயின், பொருத்தமான அதிகாரி தமது உசிதாசாரப்படி அவர் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொடுக்கலாம்.

(இ) சிங்கள மொழியில் இப்பரீட்சையை எடுத்துச் சித்தியெய்திய மாணவத்தாதிகள் (சிங்கள மொழியில்) தகுதிகாண் பரீட்சையை எடுக்க வேண்டியதில்லை.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இதுகாலவரை உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் அரசாங்க மொழிக் கொள்கையின் கட்டளைகள், விதிகள், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட விதிகளை நடைமுறையிற் கையாண்டு, அவைகளுக்கு அமைந்து நடக்க வேண்டும்.

(உ) தாதிமாராக இவர்கள் நியமனம் பெற்றதிலிருந்து அரசாங்க சேவை சகாய நிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையான பணத்தைச் செலுத்திவரவேண்டும். 29.4.1957 ந் திகதிய 372 ம் இலக்கத்தைக் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் நிபந்தனைப் பிரகாரம் இவர்கள் ஓய்வுச்சம்பளம் பெறும் அந்தஸ்தையும் விரும்பினல் பெறலாம்.

13. அரசாங்கப் பதவி நியமன சம்பந்தமாக இந்த அரசாங்க வர்த்தமானியின் முதலாம் பகுதி இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செ. பொன்னம்பலம்,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி காரியாலயம்,
த. பெ. இல. 500, கொழும்பு,
1960 ஆண்டு ஜூலை மீ 18 ந் திகதி.

விண்ணப்ப மாதிரிப்பத்திரம்

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதப்படவேண்டும்)

2. பிரத்தியேக விலாசம் : ————.

3. உத்தியோகபூர்வமான விலாசம் : ————.
(பகுதி ஊழியர்களின் விடயத்தில்)

4. பிறந்த திகதியும் வருடமும் : ————.

5. 31.7.1960 ல் சரியான வயது : ————.

6. கல்விகற்ற இடங்களின் பெயர்கள் : ————.

7. சித்தியெய்திய பரீட்சைகள் : ————.

8. (அ) எந்நாட்டவர் : ————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தையின் முழுப்பெயர் : ————.
(இ) அவருடைய விலாசம் : ————.
(ஈ) அவருடைய பிறந்த திகதியும் இடமும் : ————.
(உ) அவர் எந்நாட்டவர் : ————.

9. தந்தை அல்லது பாதுகாப்பாளரின் பெயரும் விலாசமும் : ——

10. அரசாங்கத்தில் முன்னைய சேவை, ஏதாவதிருந்தால் : ————.

11. இந்த அறிவித்தலில் காணப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகிறீரா ? : ————.

12. இதற்கு முன்பு, இப்பயிற்சி தொடர்பாக நிராகரிக்கப்பட்டீரா ? அப்படி நிராகரிக்கப்பட்டிருந்தால், காரணங்கள் என்ன ? :——

13. நீர் விரும்பும் பரீட்சை இடம் (நிலையம்) : ————.

(இந்த இடம் விண்ணப்பகாரர் வசிக்கும் வீட்டுக்கு அல்லது வேலை செய்யும் தாபனத்துக்கு அருகாமையில் இருக்க வேண்டும்)

14. எந்த மொழியில் பயிற்சி பெறுவதற்கு விரும்புகிறீர் ? :————

பின்குறிப்பு.—(க) ஆங்கில பாஷையில் சித்தியுடன் பொதுக்கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மட்டுமே ஆங்கில மொழியில் பயிற்சி பெற முடியும்.

(கா) எக்காரணத்தைக்கொண்டும் இக்காரியாலயத்துக்கு அனுப்பப் படும் விண்ணப்பங்களுடன் சான்றுப் பத்திரங்களின் மூலப்பிரதிகளோ, இணைப்பிரதிகளோ அனுப்பப்படக்கூடாது.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப் படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களிலெதுவும் பொய் யானதென்றோ தவறானதென்றோ தேர்வுக்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்டால் தகுதியற்றவளாகக் கருதப்படுவேனென்றும் நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேனென்றும் நான் நன்கு அறிவேன்.

ரூபா 5/-
பெறுமதியான
தபால்
முத்திரை.

இந்த இடத்தில் ரூபா 5 பெறுமதியான தபால் முத்திரையை ஒட்டி விண்ணப்பதாரர் அதன்மீது கையொப்பமிடவேண்டும்.

.............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## அரசுக்குரிய இலங்கை ஆகாயப் படை

பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத்தலைவர் பின்வரும் பொருள்களை கொழும்பு, பார்சன்ஸ் வீதி, அரசுக்குரிய இலங்கை ஆகாயப்படைத் தலைமைக் காரியாலயத்திற்கு வழங்கும் முத்திரித்த கேள்விப்பத்திரங்களை 1960 ஆகஸ்ட்டு மாதம் 5 ந் திகதி காலை 9.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளுவர்.

1. பூச்சுமை கலந்த எண்ணெய்

| | | கலன் |
|---|---|---|
| (அ) | முதற்பூச்சு, கல்நிறம் | 80 |
| (ஆ) | முதற்பூச்சு, வெள்ளை | 60 |
| (இ) | துலக்கப்பூச்சு வெள்ளை | 250 |
| (ஈ) | துலக்கப்பூச்சு மெல்லிய நீலம் | 100 |
| (உ) | டிை மெல்லிய சிவப்பு | 40 |
| (ஊ) | டிை நடுத்தர நீலம் | 80 |
| (எ) | டிை நடுத்தர பச்சை | 60 |
| (ஏ) | டிை நடுத்தர சிவப்பு | 50 |
| (ஐ) | டிை கறுப்பு | 20 |
| (ஒ) | டிை மஞ்சள் | 30 |
| (ஓ) | டிை நடுத்தரச்சாம்பல் | 50 |

| | கலன் |
|---|---|
| 2. சிறுசணல் எண்ணெய் இருமுறைகொதித்தது | 30 |
| சிறுசணல் எண்ணெய் கொதிக்காதது | 50 |
| ஷெலாக் வார்ணிசு | 25 |
| சோபால் வார்ணிசு | 20 |
| தருப்பன் தைலம் | 40 |
| எண்ணெய்ப் பூச்சுப் பதப்படுத்துவன | 100 |

| 3. எண்ணெய்க் காவி | அந்தர் |
|---|---|
| வெள்ளை | 10 |
| மெல்லிய சிவப்பு | 2 |
| மெல்லிய நீலம் | 3 |
| மெல்லிய பச்சை | 3 |
| செங்காவி | 4 |
| மெல்லிய சாம்பல் | 4 |

4. சீமேந்துப்பூச்சு மை

| | |
|---|---|
| வெள்ளை | 60 அந்தர் |
| வெளிறிய நீலம் | 40 ,, |
| வெளிறிய சாம்பல் | 40 ,, |
| செஞ்சிவப்பு | 40 ,, |
| வெளிறிய பச்சை | 40 ,, |
| ஐவறி | 20 ,, |
| கல்லாக்குந் திரவகம் | 140 கலன் |

5. கலக்கப்பட்டபூச்சு மை—துருத்தடை

| | |
|---|---|
| கறுப்பு | 15 கலன் |
| சிவப்பு ஒக்சைட் | 40 ,, |
| வெள்ளை | 15 ,, |
| பிரஞ்சு சாம்பல் | 30 ,, |
| கறுப்பு பிற்றுமன்பூச்சுமை (5 கலன் பீப்பா) | 50 ,, |
| கறுப்பு பிற்றுமன் பூச்சுமை (1 கலன் பீப்பா) | 20 ,, |
| வெள்ளை ஸ்பிரித்து | 120 ,, |
| தளப்பூச்சு மை—சிவப்பு | 120 ,, |
| தளப்பூச்சு மை—பிங்கலநிறம் | 40 ,, |
| தளப்பூச்சு மை—கறுப்பு | 40 ,, |

6. ஆகாயப்படைக் கட்டளைத் தலைவர், பார்சன்ஸ் வீதி, கொழும்பு என்ற விலாசத்திற் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இரு பிரதி நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

7. பார்சன்ஸ் வீதி, கொழும்பு அரசுக்குரிய இலங்கை ஆகா யப்படைக்கணக்காளரிடம் 100 ரூபாவுக்குரிய பற்றுச்சீட்டைக்காட்டி 1960 ஆகஸ்டு 4 ந் திகதி மதியம் 12 மணிக்கு முன் கேள்விப்பத்திரங் களைப் பெற்றுக் கொள்ளலாம்.

8. முதலாம் பந்தியிற் சொல்லப்பட்ட தேதிநேரத்தில் கேள் விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விகாரர் சமுகமளிக்கலாம்.

9. ஆகாயப்படைக் கட்டளைத் தலைவரிடம் வேறும் விபரங்கள் பெறலாம்.

ஜே. எல். பார்க்கர்,
ஆகாயத்துணை மார்ஷல்,
ஆகாயப்படைக் கட்டளைத் தலைவர்

## நீர்ப்பாசன இலாகா

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்பகுதிப் பெரும்பாக நீர்ப் பாசனப் பொறியியலாளர், கீழ்க்காணும் வேலைகள் செய்வதற் கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவிற் பதிவு செய்யப் பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து 16.8.1960 மு. ப. 11.30 மணி வரையும் பெற்றுக் கொள்வார்.

| | வேலையின் விபரம் | பதிவுத் தொகை |
|---|---|---|
| (i) | ஊறு கொட வத்தையில் அணைச் சுவர் கட்டுதல் | ரூபா. 20,000 அதற்கு மேலும் |
| (ii) | கொலொன்னுவையில் வீடுகட்டுதல் | ரூபா 20,000 அதற்கு மேலும் |

2. இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும், அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப் பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்த ரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இணைப் பிரதிகளுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டு பெற்று தாம் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப் படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் 13.8.1960 வரையும் அலுவலக வேலை நேரங்களில் வழங்கப்படும்.

தற்பொழுது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்கள் வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றன

வென அத்தாட்சிப் பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர்களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

வேலுவின வீதி,
கொழும்பு 9,
1960 ம் ௵ ஜூலை ௴ 11 ந் ௳.

எவ். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி,
கொழும்பு உப-பகுதி.

---

## நீர்ப்பாசன இலாகா

### நீர்ப்பாசன இலாகா தலைமைக்காரியாலயத்தில் பேச்சுவார்த்தைத் தொடர்புச் சாதனங்களும் ஒலி பெருக்கிக் கருவிகளும் பொருத்துதல்

1.7.60 ல் வெளியான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 24.6.60 ல் கொடுக்கப்பட்ட மேலே கூறப்பட்ட கேள்விப்பத்திர அறிவித்தல் இத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

யாவத்த ரோட்,
கொழும்பு 5.

வி. குமாரசுவாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்
கட்டிட உப பகுதி.

## நீர்ப்பாசன இலாகா

1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ம் திகதி வெளிவந்த 12,147 ம் இலக்க அரசாங்க கெசட் பத்திரிகை முதலாம் பிரிவு இரண்டாம் பாகத்தில் (719 ம் பக்கம்) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்படி ஹஸலக சிறு குளத்தின் உள் வெளி மதவுகளுக்கு இரும்பினுல் இணைக்கப்பட்ட கதவுகளும் அவைகளைத்திறக்கும் இயந்திர இணக்கங்களும் ஹஸலக சிறு குளத்தின் வானுக்கு இரும்புக் கதவுகளும் அவைகளைத்திறக்கும் இயந்திர, இயந்திர இணக்கங்களும் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள், மத்திய பகுதி பிரதான நீர்ப்பாசனப் பொறியியலாளர், 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் திகதி புதன்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்வார்.

வேரகன் தொட்டையிலுள்ள ஹஸலக உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதி திங்கட்கிழமை வரைக்கும் இதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹஸலக உப பகுதி.

ஹஸலக உப பகுதி நீர்ப்பாசனக் காரியாலயம், வேரகன் தொட்டை,
1960 ம் ௵ ஜூலை ௴ 15 ந் ௳.

---

## நீர்ப்பாசன இலாகா

வட பகுதி, வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இன்ஜினியரால் கீழ்க்காணும் வேலைக்காகிய வெவ்வேறு விண்ணப்பப் பத்திரங்களை இவ்வருடத்திய ஆகஸ்ட்டு மாதம் 9 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காணும் விபரத்திற்கு ஏற்றபடி ஏற்றுக்கொள்ளப்படும் :—

| வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரரின் தொகை | கேள்விப்பத்திரத் திற்குரிய கட்டுப் பணம் | இலாகாவினுல் இனமாகக் கொடுக்கப் படும் வேலைக்காகிய பொருட்கள் |
|---|---|---|---|
| (i) முகத்தான்குளம் மண் வேலை .. | .. ரூபா 45,000 | .. ரூபா 25 .. | — |
| (ii) ஈரல்பெரியகுளம் மண்வேலை .. | .. ரூபா 25,000 | .. ரூபா 25 .. | — |
| (iii) மணியர்குளம் பாலம் கட்டும் வேலை .. | .. ரூபா 25,000 | .. ரூபா 25 .. | சீமந்து மாத்திரம் கொடுக்கப்படும் |

2. முகத்தான் குளம், ஈரல் பெரியகுளம் மண்வேலைக்கு மண்வேலை செய்யும் யந்திரங்களை உடையவர்கள் மாத்திரம் கேள்விப் பத்திரங்களுக்கு மனுச்செய்யவும்.

3. விண்ணப்பப் பத்திரங்களை இவ்வருஷ ஆகஸ்டு மாதம் 8 ந் திகதிவரையும் வவுனியாப் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங்களுக்குக் காரியாலயத்திற்கு நேர்முகமாக வந்தோ அல்லது மனுச்செய்தோ கோரவும்.

4. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசம் இருப்பின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அவ்வேலைகள் திருப்திகரமாகச் செய்யப்படுகிறதென்றும் அத்தாட்சிப்பத்திரம் ஒன்று சமர்ப்பிப்பதுடன் வேறு எவ்வேலையும் கைவசம் இல்லையென்று அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன எஞ்சினியர், வவுனியா.

1960 ம் ௵ ஜூலை ௴ 15 ந் ௳.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் ஆவணி மாதம் 17 ம் திகதி (17.8.60) காலை 9.30 மணிவரையும் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண குருனைக்கல் மாவட்டத்தில் உள்ள கக்வட்டுன ஓயா என்னும் இடத்தில் " விவாகமாகிய இயந்திரவேலைக்காரர்களுக்கு 4 தற்காலிக நிரந்தரவாடிகள் கட்டல் ".

கேள்விப்புத்திரம் கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் இடம் இருந்து கேள்வித்தாள்களைப் பெற்று இருதாள்களில் மனுச் செய்தல் வேண்டும். வேலையின் பெயர் இடது பக்க உறையில் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்தோ அல்லது நேரில் எடுத்தோ அனுப்ப வேண்டும்.

வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 7,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சிபண்ணும் ஒப்பந்தக்காறருக்கு மட்டும் நீர்ப்பாசன பொறியியலாளர் ஆவணி மாதம் 16 ந் திகதி (16.8.60) நண்பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 25 இந்த வேலைக்கு முற்பணமாக கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டை கேள்வித்தாள்களுக்கு மனுச்செய்யும் பொழுது காட்டவேண்டும்.

கு. செல்வராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயா திட்டம்.

மக்குள்பொத்த இப்பாகமுவ.

## நீர்ப்பாசன இலாகா

குருளுவெவா குளத்தின் இ.ப. பிரதான வாய்க்காலைச் சுத்தம் செய்வதற்காகிய கேள்விகள், 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ந் திகதி, புதன்கிழமை, பிற்பகல் 2 மணிவரையும், பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் அவர்களால் கோரப்படுகின்றன.

ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு இவ்விலாகாவில் பதிவு செய்யப்பட்டும், எதும் ஒரு கச்சேரியிலோ அல்லது மெகொடவேவாவிலுள்ள குருளுவேவா உப நீர்ப்பாசன பகுதிக் காரியாலயத்திலோ, ரூபா 50 கட்டியதற்கு ஆதாரமாகப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரருக்கு மாத்திரமே, கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

குருளுவேவா, உபபிரிவு நீர்ப்பாசன அதிகாரியிடம் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள், இரு பிரதிகளாகச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏனைய விபரங்கள் இவ்வுத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. எவ். மஹாகமகே,
உப பகுதி நீர்ப்பாசன அதிகாரி,
குருளுவேவா.

மெகொடவேவா,
15.7.60.

## நீர்ப்பாசனப் பகுதி

பின்வரும் சேவைகட்கு வட மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியர் அனுராதபுரம், 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 10 ந் திகதி, புதன்கிழமை காலை 9.30 மணிவரை தனிப்பட்ட கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளுவார்.

| | சேவையின் விபரம் | பதிவுசெய்யப் பட்ட தொகை ரூ. ச. | கேள்விக் கட்டுப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| (1) | பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு குறை நிரந்தர வீடு அமைத்தல் | 12,500 00 | 25 00 |
| (2) | பொலிஸ்சாஜன்கட்கு இரு குறை நிரந்தர வீடு அமைத்தல் | 15,000 00 .. | 25 00 |
| (3) | பொலிஸ் காவலர்கட்கு ஆறு குறை நிரந்தர வீடு அமைத்தல் | 45,000 00 .. | 25 00 |
| (4) | நிரந்தரக் கனிஷ்ட உத்தியோகத்தர் வீடுகள் நான்கு அமைத்தல் | 22,000 00 .. | 25 00 |
| (5) | உஸ்கலசியம்பலாங்கமுவ திட்டத்தில் ஒரு கோஸ்வே அமைத்தல் | 10,000 00 .. | 25 00 |

2. நீர்ப்பாசன பகுதியில் ஒவ்வொரு சேவைக்கும் நேராகவுள்ள தொகைகட்கோ அல்லது அவைகட்குக்கூடவோ பதிவுசெய்யப்பட்ட பொருத்தனைக்காரர் மட்டுமே கேள்வி கேட்பதற்குத் தகுதியுள்ளவர்களாவர்.

3. இராஜங்கணைத் திட்டத்தின் நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து வேறு விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 18 ந் திகதியிலிருந்து ஆவணி மாதம் 8 ந் திகதிவரை காரியாலய நேரத்தில் கொடுக்கப்படும்.

ரி. ஆர். டி. சில்வா,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
இராஜங்கணைத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
தம்புத்துகம,
1960 ம் ஞூ ஜூலை மீ 9 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

மாவட்ட நீர்ப்பாசன எந்திரி, வ.ம.பி., அநுராதபுரம் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்கு 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார்.

(a) அநுராதபுர புதிய நகர நீர்ப்பாசன தலைமைக்காரியாலயத்து உட்புற வீதிகளில் மதவுக்கட்டுவேலை, வீதிகளுக்கு கல்லும் தாரும் போடல் ;

(b) மகா கனந்தராவாவுக்குப் போகும் தெருவின் முதல் மைலுக்கு கல்லும் தாரும் போடல் ;

(c) அநுராதபுர புதிய நகர நீர்ப்பாசன தலைமைக் காரியாலயத்தில் உயர்ந்த தண்ணித் தாங்கி ரவர் கட்டல் ;

(d) நாச்சடுவாவில் கண்காணிப்பாளர் இல்லம் கட்டல் ;

(e) மகா கனந்தராவில் நிரந்தர தொழிலாளர் குடிசை கட்டல்.

(a), & (b) வேலைகளுக்கு நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 40,000 குறையாமல், (c), (d) & (e) வேலைகளுக்கு நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000 குறையாமல், பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பங்கள் அனுப்ப தகுதி உடையவர்கள். ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும்.

மிகிந்தலை மகா கனந்தராவ உப பகுதி நீர்ப்பாசன எந்திரி அவர்களிடமிருந்து 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 25 ம் திகதியிலிருந்து ஆவணி மாதம் 13 ம் திகதிவரை அலுவலக நேரங்களில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் இரண்டு படியில் சமர்ப்பிக்கவேண்டும். எல்லாவிதமான விபரங்களும் மேற்குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரம் பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மகா கனந்தராவ நீர்ப்பாசன எந்திரி அவர்களுடைய அலுவலகத்திலோ அல்லது கச்சேரியிலோ ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25 விண்ணப்பப் பணம் கட்டி பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கவேண்டும் அல்லாமலும் அவர்கள் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் என்றதையும் சான்றுப்படுத்த வேண்டும். தற்சமயம் ஒப்பந்தம் ஒப்புக்கொண்டிருக்கும் ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் வேலை ஒப்பந்தம் செய்து கொண்டவர்களிடமிருந்து தங்கள் திருப்தி பற்றிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரர்கள் சமுகந்தர அனுமதிக்கப்படுவார்கள்.

டி. வி. ஏ. சேனரத்தின,
நீர்ப்பாசன எந்திரி,
மகா கனந்தராவ உ. ப.

மிகிந்தலை,
1960 ம் ஞூ ஆடி மீ 14 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், அனுராதபுரம் அவர்களால் 17.8.60 மாலை 2 மணிவரை இவ்விலாகாவில் ரூபா முப்பதினாயிரத்துக்கும் (ரூபா 30,000) அதற்குக் கூடிய தொகைக்கும் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் குளங்களின் வெள்ள அழிவுகளை திருத்துவதற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) டியூனு வேவாக்குளம்.

(2) றம்பத்விலாக்குளம்.

உப நீர்ப்பாசன உத்தியோகத்தர், குருனுவெவா, மீகொடவெவா, அவர்களிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரத்தில், கேள்விப்பத்திரம் இரு பிரதிகளாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தேவையான விபரங்களை இவரிடமிருந்து அறியலாம்.

கேள்விப் பத்திரங்கள், நீர்ப்பாசன கந்தோர் குருனுவெவா, மீகொடவெவா அல்லது ஒரு கச்சேரியில் கேள்விப்பத்திரக் கட்டணம், ஒவ்வொன்றுக்கும் ரூபா 50 கட்டி பற்றுச் சீட்டு பெற்றவர்களுக்கு மட்டுமே 27.7.60 ல் இருந்து 16.8.60 பிற்பகல் 2 மணிவரையும் கொடுக்கப்படும்.

ஏ. எவ். மகாகமகே,
உப நீர்ப்பாசன உத்தியோகத்தர்,
குருனுவெவா.

மீகொடவெவா,
1960 ம் ஞூ ஜூலை மீ 13 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

வடகிழக்குப் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் பொலன்னறுவ, அவர்கள் கீழ்க்காணும் வேலைகளுக்குத் தனித்தனி கேள்விப் பத்திரங்கள் மு.ப. 9.30, புதன்கிழமை 17.8.60 வரைக்கும் ஏற்றுக்கொள்வார்.

(1) கல்லமுனையில் நீர்வீழ்ச்சிக் கட்டிடங்கள் 33 அமைத்தல், (Falls : 33 Nos. 0′–1′ ;

(2) கல்ல முனைமுதல், மூன்றும் பிரிவுகளில் (Tracts I & III கூலியாளர்கள் வசிக்கும் இரட்டை வீடுகள் அமைத்தல் (Twin Labour Cottages);

(3) அற்றகல்லாவ அமுனையில் மின்னேரி உப பகுதியின் கீழ் ஒரு ஓவசியர் வீடு அமைத்தல்.

கேள்விப்பத்திரங்கள் மின்னேரியா உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களிடம் பெற்று இரட்டைப் பிரதியில் அனுப்பப்படவேண்டும். ஏனைய விபரங்கள் யாவும் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 22.7.60 தொடங்கி 12.8.60 வரைக்கும் மின்னேரியா உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களால் வழங்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இந்த இலாகாவில் முறையே ரூபா 6,000, 11,000, 11,000, 17,000 க்கும் மேற்படவும் பதிவு செய்யப்பட்டவர்களாக விருக்க வேண்டும். விண்ணப்பக்காரர்கள் ஒவ்வொருவரும் மேற்குறித்த வேலைகளுக்குத் தனித்தனி வைப்புப்பணமாக ரூபா 25 கட்டி மின்னேரியா உப தலைவரிடமிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சீமென்றைத்தவிர வேறு ஆயுதங்களோ அல்லது மற்றும் சாமான்களோ கொடுக்கப்படமாட்டா.

ஜி. எஸ். எம். சொக்மன்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மின்னேரியா உப பகுதி.

மின்னேரியா,
1960 ம் ஞூ ஜூலை மீ 11 ந உ.

## நீர்ப்பாசன இலாகா

வடகிழக்குப் பகுதி நீர்ப்பாசன இன்ஜினியர் மின்னேரியா உப பகுதியில் உள்ள " கல்வின்த மகாவெவ்யில் 15 " உள்ள ஓர் மதவு அமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் திகதி (17.8.1960) காலை 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எல்லா விபரங்களும் மின்னேரியா உபபகுதி நீர்ப்பாசன இன்ஜினியரிடம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் திகதியிலிருந்து (22.7.1960) ஆகஸ்ட் மாதம் 12 ம் திகதி வரை (12.8.1960) பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இவ்விலாகாவில் ரூபா 7,000 மும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 வைப்புப் பணமாகக் கட்டவேண்டும்.

எவ்வித ஆயுதங்களும் இவ்விலாகாவால் வழங்கப்படமாட்டாது.

ஜீ. எஸ். எம். சொக்மன்,
நீர்ப்பாசான இன்ஜினியர்,
மின்னேரியா உப பகுதி.

மின்னேரியா,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 13 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

வட கிழக்குப் பகுதி நீர்ப்பாசான இன்ஜினியர் மின்னேரியா உப பகுதியில் உள்ள, மின்னேரியா திட்டத்தில் 4 ம் பாகத்தில் ஓர் ஓவசியர் வீடும் தொழிலாளர் வீடும் அமைப்பதற்காக தனித்தனிக் கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் திகதி (17.8.1960) காலை 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எல்லா விபரங்களும் மின்னேரியா உப பகுதி நீர்ப்பாசன இன்ஜினியரிடம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் திகதியிலிருந்து (22.7.1960) ஆகஸ்ட் மாதம் 12 ம் திகதி வரை (12.8.1960) பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இவ்விலாகாவில் ரூபா 17,000 மும் 13,000 மும் அதற்குமேலும் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 வைப்புப் பணமாகக் கட்டவேண்டும்.

எவ்வித ஆயுதங்களும் இவ்விலாகாவால் வழங்கப்படமாட்டாது.

ஜீ. எஸ். எம். சொக்மன்,
நீர்ப்பாசன இன்ஜினியர்,
மின்னேரியா உப பகுதி.

மின்னேரியா,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 13 ந உ.

---

### குழாய்த் தண்ணீர் வழங்கும் திட்டங்கள்—கெக்கிராவையும் கரவெட்டியும்

கெக்கிராவைக்கும், கரவெட்டிக்கும் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டங்களை அமைப்பதற்கு கேள்விகள்கோரி 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ள விளம்பரத்தின் தொடர்பாக இத்தால் அறிவிப்பது யாதெனில், கேள்விப் பத்திரங்களை வழங்குதற்கு வேண்டிய பதிவுத்தொகையின் அளவு ரூ. 150,000 ம் அதற்கு மேலும் எனத்திருத்தப்பட்டும், கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதியும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் முறையே 1960 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 8 க்கும் 1960 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 17 க்குமாக நீடிக்கப்பட்டிருக்கின்றன வென்பதேயாம்.

வி. சி. ஜயசூரியா,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந உ.

---

## தபாற் தந்திப் பகுதி

### பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 24 ந திகதி மு.ப. 9.30 மணிவரை கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மருதானை, தபாற் தந்திப் பண்டசாலையிற் கிடக்கும் பாவனையற்ற இந்த இருப்புப் பொருட்களைப் பற்றிய ஏனைய விபரங்களை, மருதானை தபாற் தந்திப் பண்டசாலை இஞ்சினியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப்பகுதித் தபாற் கந்தோர்த் தலைவரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள், " இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் குறிப்பிடப்பட்டும், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியருக்கு விலாசமிடப் பட்டதுமான உறைகளில் உள்ளடக்கப்பட்டு அவருக்கு 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 24 ந திகதி மு.ப. 9.30 மணிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

கூடிய தொகைக்கு சில பொருட்களுக்கு மட்டுமே சமர்ப்பிக்கப்படும். கேள்விப்பத்திரங்களைவிடக் குறைந்த தொகைக்கு எல்லாப் பொருட்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் விருப்பப்பட்டு ஆராயப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் கேள்விப்பத்திர பெறுமதியின் முழுத் தொகையை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் பிரதான தந்திக் காசாளரிடம் கட்ட வேண்டும் அல்லது தபாற் தந்தித் தலைமை அதிபதியின் பெயருக்குச் சாட்டப்பட்ட குறுக்குக் கோடிட்ட காசோலையை தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியருக்கு அனுப்புதல் வேண்டும்.

1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 24 ந திகதி மு.ப. 10 மணிக்கு தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரின் காரியாலயத்தில் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்பொழுது கேள்விப்பத்திர கையொப்பதாரர்கள் சமூகமளிக்க வேண்டும்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
13.7.1960.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

கொழும்பு 5 கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச்சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் ஹொரணை இரத்தினபுரி வீதி வழியிலுள்ள ஹொரணை, முனகமையில் ஒரு கராச் நிறுவுவதற்கான இடத்தை ஒழுங்கு செய்வதற்கு 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் திகதி மு.ப. 10 மணிவரை கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியருக்கு விண்ணப்பிக்கவும்.

ரூ. 30,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரே கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றேரலைகள், பொரல்ஸ்கமுவ, வெரஹெரை, இலங்கை போக்கு வரத்துச் சபை பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரின் பரிசோதனைக்கும் அங்கீகாரத்துக்கும் காட்டப்படவேண்டும். அப்படியான சான்றேரலைகள் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப் பட்டபின், கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 100 ஐக் கட்டவேண்டும்.

கட்டுப்பணப் பற்றுச்சீட்டை காட்டுவதன்பேரில் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியர் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ம் திகதிவரை கேள்விப்பத்திரங்களை வழங்குவார்.

இலங்கை போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்ட பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் சமர்ப்பிக்கவேண்டும்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் திகதி.

---

### ஒப்பந்தக் கேள்விப்பத்திர அறிவித்தல்—மொனருகல கச்சேரியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டிடங்கள் அமைத்தல்

மொனருகல மாவட்ட அதிபர் மொனருகல கச்சேரியில் வாகனங்கள் நிறுத்துவதற்காக 4 திறந்த கட்டிடங்களும் 2 மூடிய கட்டிடங்களும் அமைப்பதற்காக 5.8.60 பகல் 12 மணிவரை ஒப்பந்தப்பத்திரங்கள் பதிவு செய்த கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25 இலங்கையில் உள்ள எந்தக் கச்சேரியில் அல்லது பொதுதிறைசேரியில் கட்டிய பற்றுச்சீட்டு சமர்ப்பிப்போருக்கு 3.8.60 பிற்பகல் 3 மணிவரை வழங்குவார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் சீல் வைத்த காகித உறையில் "மொனருகல கச்சேரி–வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டிடங்கள் அமைப்பதற்கு கேள்விப்பத்திரம்" என எழுதி அரசாங்க மாவட்ட அதிபர், கச்சேரி, மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்களை பதிவுசெய்த காகிதம் மூலம் அனுப்பலாம் அல்லது காரியாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் போடலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட **உடனே** வேலையை ஆரம்பிக்கவேண்டும்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் அல்லது எதனையும் ஏற்கும் உரித்து மொனருகலை அதிபருக்கு உரியதாகும்.

வி. பி. சில்வா,
மொனருகல மாவட்ட அதிபருக்காக.

மொனருகல கச்சேரி,
1960 ம் ஞூ ஜூலை பீ 12 ந் உ.

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏல விற்பனை

கீழே குறிக்கப்பட்டுள்ள பறவைகளும், பிராணிகளும் ஆவணி மாதம் 8 ம் திகதி காலை 10 மணிக்கு வத்துப்பிட்டிவலையில் உள்ள பால்ய குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையில் ஏலத்தில் விற்கப்படும். அவைகளை வாங்கியவுடன் பணம் கொடுத்து, உடனே அப்புறப்படுத்தல் வேண்டும்.

இவைகளைப் பார்க்க விரும்புவோர் கிழமை நாட்களில் காலை 9 மணிக்கும் மாலை 4.30 மணிக்குமிடையில் பார்வையிடலாம்.

9 நாம்பன் மாட்டுக் கன்றுகள்.
2 பெரிய பெண் பன்றி.
1 பெரிய ஆண் பன்றி.
35 லெகோன்ஸ் கோழிகள்.
15 ஆர். ஐ. ஆர். கோழிகள்.
1 வயதுபோன பசு மாடு.

யு. எஸ். குணரட்டின,
சிறைச்சாலை அதிகாரி.

அரசினர் பால்ய குற்றவாளிகளின்
பயிற்சிப் பாடசாலை,
வத்துப்பிட்டிவல, நித்தம்புவ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது